(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 14(1).] **பாராளுமன்றம்**

## 14 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2015 மே 08 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## திகதி குறிக்கப்படாத பிரேரணை முன்னறிவித்தல்

பா. 307/ '15

கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ்
கௌரவ பந்துல குணவர்தன
கௌரவ காமினி லொக்குகே
கௌரவ சாலிந்த திசாநாயக்க
கௌரவ தினேஷ் குணவர்தன
கௌரவ ரீ. ரஞ்ஜித் த சொய்சா
கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம
கௌரவ மனுஷ நாணாயக்கார
கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண
கௌரவ ஜானக பண்டார
கௌரவ பொ. பியசேன
கௌரவ வை.ஜீ. பத்மசிரி
கௌரவ எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்
கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே
கௌரவ அதாவுத செனெவிரத்ன
கௌரவ (திருமதி) நிரூபமா ராஜபக்ஷ
கௌரவ (செல்வி) கமலா ரணதுங்க
கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா
கௌரவ டலஸ் அழகப்பெரும
கௌரவ திஸ்ஸ கரல்லியத்தே
கௌரவ ரெஜினோல்ட் குரே
கௌரவ சீ.பீ. ரத்நாயக்க
கௌரவ சரத் குமார குணரத்ன
கௌரவ ஜயசிங்க பண்டார
கௌரவ ஜே. ஸ்ரீ ரங்கா
கௌரவ எரிக் பிரசன்ன வீரவர்தன
கௌரவ சுசந்த புஞ்சிநிலமே

கௌரவ எஸ்.எம். சந்திரசேன
கௌரவ நிர்மல கொத்தலாவல
கௌரவ பியங்கர ஜயரத்ன
கௌரவ லொஹான் ரத்வத்தே
கௌரவ நாமல் ராஜபக்ஷ
கௌரவ தாராநாத் பஸ்நாயக்க
கௌரவ உதித் லொக்குபண்டார
கௌரவ தேனுக விதானகமகே
கௌரவ சரண குணவர்தன
கௌரவ சஜின் த வாஸ் குணவர்தன
கௌரவ கனக ஹேரத்
கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து
கௌரவ கீதாஞ்ஜன குணவர்தன
கௌரவ ஜே. ஆர். பி. சூரியப்பெரும
கௌரவ (கலாநிதி) சரத் வீரசேகர
கௌரவ ரொசான் ரணசிங்க
கௌரவ ஏ.எம். சாமிக புத்ததாஸ
கௌரவ ரீ.பீ. ஏக்கநாயக்க
கௌரவ சீ.ஏ.சூரியஆரச்சி
கௌரவ விமல் வீரவங்ச
கௌரவ ரோஹன திசாநாயக்க
கௌரவ சிறிபால கமலத்
கௌரவ விக்டர் அந்தனீ
கௌரவ மொஹான் லால் கிரேரு
கௌரவ வாசுதேவ நாணாயக்கார
கௌரவ விஜய தஹநாயக்க
கௌரவ வி.கே. இந்திக
கௌரவ செஹான் சேமசிங்க
கௌரவ ஜானக வக்கும்புர
கௌரவ ஹேமால் குணசேக்கர
கௌரவ லக்ஷமன் வஸந்த பெரேரா
கௌரவ  நெரன்ஜன் விக்கிரமசிங்க
கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன
கௌரவ ஏ.பி.ஜகத் புஷ்பகுமார
கௌரவ டிலான் பெரேரா
கௌரவ லக்ஷ்மன் செனெவிரத்ன
கௌரவ பியசேன கமகே
கௌரவ ரோஹித அபேகுணவர்தன
கௌரவ திளும் அமுணுகம

கௌரவ குமார வெல்கம

கௌரவ சனீ ரோஹன கொடிதுவக்கு

கௌரவ ஏ.ஆர்.எம். அப்துல் காதர்

கௌரவ சாந்த பண்டார

கௌரவ ஜயரத்ன ஹேரத்

கௌரவ விநாயகமூர்த்தி முரளீதரன்

கௌரவ விதுற விக்கிரமநாயக்க

கௌரவ மாலனீ பொன்சேக்கா

கௌரவ டிரான் அலஸ்

கௌரவ சந்திரசிறி கஜதீர

கௌரவ ஜீவன் குமாரணதுங்க

கௌரவ நிசாந்த முதுஹெட்டிகமகே

கௌரவ இந்திக பண்டாரநாயக்க

கௌரவ துலீப் விஜேசேக்கர

கௌரவ குணரத்ன வீரகோன்

கௌரவ தி.மு. ஜயரத்ன

கௌரவ பிரபா கணேசன்

கௌரவ சனத் ஜயசூரிய

கௌரவ நியோமால் பெரேரா

கௌரவ அருந்திக பர்னாந்து

கௌரவ திலங்க சுமதிபால

கௌரவ டபிள்யு.டி.ஜே. செனவிரத்ன,— இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் திரு. அர்ஜுன மகேந்திரன் அவர்களை பதவிநீக்கக் கோரி அரசாங்கத்திற்கு கூட்டாக அழுத்தம் கொடுக்கும் பிரேரணை,—

அரசியலமைப்பின் 148 வது உறுப்புரைக்கிணங்க, பகிரங்க நிதி பற்றிய பூரண பொறுப்பு இலங்கைப் பாராளுமன்றத்திற்கு உரித்தாகவிருப்பதாலும்;

நாட்டின் விலைகள் மற்றும் பொருளாதார ஸ்திரப்பாட்டை பாதுகாப்பதும் நிதிமுறைமையின் ஸ்திரப்பாட்டை உறுதிசெய்தலுமே இலங்கை மத்திய வங்கியின் அடிப்படைக் கடமைப் பொறுப்பாகவிருப்பதாலும்;

மேற்படி பொறுப்புமிக்க கடமையை நிறைவேற்றுவதற்கான பொறுப்பு இலங்கை மத்திய வங்கியின் ஆளுநருக்கும் நாணயச் சபைக்கும் கையளிக்கப்பட்டுள்ளதோடு, அச்சபைக்குத் தலைமை வகிப்பவர் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராகவிருப்பதால், அப்பதவியை வகிப்பவர் மிகத் திறமையும், நேர்மையும், நம்பகத்தன்மையும் கொண்டவராதல் வேண்டுமென்பதாலும்;

2015 சனவரி மாதத்தின் பிற்பகுதியில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக சிங்கப்பூர் பிரசையும் பிரதமரின் நெருங்கிய நண்பருமான திரு. அர்ஜுன மகேந்திரன் நியமிக்கப்பட்டதன் பின்னர், அவரது குறுகிய பதவிக் காலத்தில் இலங்கை மத்திய வங்கி மிகவும் மோசமான விதத்தில் களங்கமடைந்துள்ளதால், இதனூடாக இலங்கை மத்திய வங்கிக்கும் முழுநாட்டுக்கும் பாரிய அபகீர்த்தியும் நட்டமும் ஏற்பட்டுள்ளதாலும், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் திரு. அர்ஜுன மகேந்திரன் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஊழல் நிறைந்த மற்றும் வெளிப்படைத்தன்மையற்ற செயற்பாடுகளில் ஒரு சில, அதாவது

(1) 2015 பெப்புருவரி 27 ஆம் திகதி இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட 30 வருட திறைசேரி முறிகளின் வழங்கலை ஊழல் மிக்க முறையில், தனது மருமகனின் முதனிலை கொடுக்கல்வாங்கல் கம்பனியான பபெச்சுவல் ரெஷரீஸ் கம்பனிக்கு பெற்றுக்கொடுத்ததன் மூலம் திரு. அர்ஜுன மகேந்திரன் வேண்டுமென்றே பாரிய நட்டத்தை அரசுக்கும் முழுப் பொருளாதாரத்துக்கும் ஏற்படுத்தியுள்ளமை;

மேற்படி கொடுக்கல்வாங்கலின் போது நாட்டின் வட்டி வீதத்தை தனது மருமகனின் கம்பனியின் நன்மைக்கு ஏற்றவாறும், தேவையற்றவாறும், செயற்கையாகவும் அதிகரித்ததனால் இக்கம்பனிக்கு சுமார் ரூபா 200 கோடி முறையற்ற இலாபத்தை ஈட்டிக் கொள்வதற்கான வாய்ப்பு இவரால் உருவாக்கிக் கொடுக்கப்பட்டதன் மூலம், இலங்கை வரலாற்றில் மிகப்பெரிய வட்டி நட்டமான சுமார் ரூபா 4,500 கோடி தொகையை, கடந்த சுமார் 6 வாரங்களில் இலங்கை அரசுக்கு ஏற்க நேரிட்டதற்கு மேலாக மட்டுமன்றி, திரு.அர்ஜுன மகேந்திரனின் மோசடியான செயலினால் முழு மொத்த நிதி முறைமையினதும் ஒட்டுமொத்த வட்டி வீதம் அதிகரித்ததனால், அனைத்து மக்களுக்கும், அதாவது நாட்டின் பணவீக்கம் 6 வருடத்துக்கும் மேற்பட்ட நடுத்தர தனி இலக்கத்தில் பேணி வரப்பட்டதன் நன்மையை இழக்க நேரிடுவதால், இலங்கை மத்திய வங்கியின் அடிப்படைக் கடமைப் பொறுப்பொன்றான விலை ஸ்திரப்பாட்டை பேணுவதிலும் பலத்ததொரு தாக்கம் விளைவிக்கப்பட்டுள்ளமை;

(2) 2015 பெப்ருவரி மாதம் 27 ஆம் திகதி இலங்கை மத்திய வங்கி ஆளுநர் திரு. அர்ஜுன மகேந்திரனின் நடவடிக்கையின் விளைவாக ஊழல்மிக்க வகையில் உருவாகிய செயற்கையான வட்டி வீதம் காரணமாக ஏனைய அனைத்து வட்டி வீதங்களிலும் தாக்கம் ஏற்பட்டதனால், அன்றைய தினத்திற்கு முன்பிருந்த அனைத்து வட்டி வீதப் பெறுமதிகளுடனும் ஒப்பிடுகையில், வட்டி வீதம் ஏறத்தாழ 30% அளவினால் அதிகரித்ததோடு, இவ்வாறு ஒட்டுமொத்த நிதி முறைமையினதும் வட்டி வீதம் அதிகரித்ததனால் தொழில்முயற்சியாளர்கள், நிதிக் குத்தகை செலுத்துநர்கள், வீடமைப்பாளர்கள் உள்ளிட்ட அனைத்து கடன் பெறுனர்களினதும் வட்டி வீதங்கள் அநாவசியமான வகையில் அதிகரித்துள்ளதால், எமது நாட்டில் பெரும்பாலான மக்களுக்கு உயர்ந்ததொரு வட்டித் தொகையைச் செலுத்த நேரிடுவதன் மூலம் ஒட்டுமொத்த வங்கி மற்றும் வங்கியல்லாத நிறுவனங்களின் அறவிடமுடியாக் கடன் தொகையும் எதிர்வரும் சில கிழமைகள் மற்றும் மாதங்களினுள் உயர்வடையும் பாரிய ஆபத்து உருவாகியிருப்பதோடு, இந்நிலைமை காரணமாக இலங்கை மத்திய வங்கியின் ஏனைய அடிப்படை கடமைப் பொறுப்பான நிதிமுறைமையின் உறுதித்தன்மையை பாதுகாத்தலும் இன்று பெரும் சவாலுக்கு உள்ளாகியுள்ளமை;

(3) 2015 சனவரி மாதம் பிற்பகுதியில் நிதி அமைச்சரும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும் சர்வதேச நாணய நிதியத்தோடு (International Monetary Fund) நடத்திய கலந்துரையாடலின் பின்னர், சில தினங்களில் மேற்படி நிதியத்திலிருந்து அமெரிக்க டொலர் 400 கோடியை பெற்றுக்கொள்ள இலங்கை அரசாங்கத்திற்கு முடியுமென்பதாகவும், ஆயினும் அத்தகைய பணம் எதனையும் இலங்கைக்கு பெற்றுக் கொடுப்பதற்கு சர்வதேச நாணய நிதியம் தயாராக இல்லையென நிதியத்தைச் சேர்ந்த உயர்மட்ட அதிகாரிகள் அதற்கு சில தினங்களுக்குப் பின்னர் செய்தியாளர் மாநாடொன்றில் தெரிவித்துள்ளதோடு, முழு நாட்டினையும், ஏனைய வெளிநாட்டு வாடிக்கையாளர்கள் மற்றும் முதலீட்டாளர்களையும் தவறாக வழிநடாத்துவதற்கு ஆளுநரும் நிதி அமைச்சரும் முயற்சித்துள்ளமையே இதன் மூலம் தெளிவாகின்றதாலும், இதன் காரணமாக இலங்கை மத்திய வங்கி மற்றும் நிதி அமைச்சின் மீதுள்ள சர்வதேசத்தின் நம்பிக்கை பெருமளவில் வீழ்ச்சியடைந்துள்ளமை;

(4) 2015 பெப்ருவரி மாதத்தின் ஆரம்ப வாரத்தில், மிகவும் கிட்டிய எதிர் காலத்தில் அமெரிக்க டொலர் 150 கோடி தொகையை சர்வதேச இறைமை முறிகளை (International Sovereign Bond) வழங்குவதன் மூலம் பெற்றுக்கொள்ள அரசாங்கம் தயாராயுள்ளதாக நிதி அமைச்சரும் ஆளுநரும் ஊடகங்களுக்குத் தெரிவித்ததோடு, இன்று வரை, அதாவது 12 வாரங்களின் பின்னர்கூட அத்தகைய எதுவித சர்வதேச முறியையும் வழங்குவதற்கு அவர்களால் முடியவில்லை என்பதோடு,

இது தொடர்பாக நிதி அமைச்சர் மற்றும் இலங்கை மத்திய வங்கி ஆளுநர் மீதான ஊழல் மற்றும் மோசடி குற்றச்சாட்டுக்களின் காரணமாக அவ்வாறான சர்வதேச முறியொன்றை அவர்கள் இலங்கை அரசுக்கு வழங்குவதில் இடையூறுகள் இருப்பதாக சர்வதேச வட்டாரங்கள் தெரிவித்துள்ளதோடு, இவ்வாறு அரசாங்கத்திற்கும் இலங்கை மத்திய வங்கிக்கும் வெளிநாட்டு நாணயத்தை பெறமுடியாதுள்ளதால் தற்போது இலங்கையில் வெளிநாட்டு நாணய ஒதுக்குத் தொகை பெரும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளமை;

(5) இலங்கை மத்திய வங்கியின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள இலங்கையின் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கு, 2014.12.31 ஆம் திகதியளவில் அமெரிக்க டொலர் 820 கோடி பெறுமதியை கொண்டிருந்ததோடு, மேலே கூறப்பட்ட (3) மற்றும் (4) ஆம் விடயங்களின் காரணமாக தற்போது இப் பெறுமதி பாரிய வீழ்ச்சியை பிரதிபலித்து அமெரிக்க டொலர் 680 கோடி வரை குறைந்துள்ளதால் வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்களை செய்யும் போது எமது நாடு தொடர்பாக 2014 இல் இருந்த உயர் மட்டத்திலான நம்பிக்கை, இந்த அரசாங்கத்தினதும், நிதி அமைச்சரினதும், இலங்கை மத்திய வங்கி ஆளுநரினதும் தொலைநோக்கற்ற தன்மை மற்றும் திறமையின்மை காரணமாக, தற்போது கணிசமானளவு குறைந்த மட்டமொன்றுக்கு வீழ்ச்சியடைந்துள்ளதால், நாட்டிற்கு உட்பாய்ச்சப்படும் முதலீடுகள் தொடர்பாக நிச்சயமற்றதொரு தன்மையும் உருவாகியுள்ளதோடு ஒட்டுமொத்தமான வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல் சந்தையும் அதிர்ச்சியடைந்துள்ளதால், எமது நாட்டின் வெளிநாட்டு முதலீடுகள் வெளிப்பாய்ச்சப்படும் நிலைமையொன்றும் எதிர்காலத்தில் ஏற்படுவதற்கான அடிப்படை உருவாகி வருகின்றமை;

(6) எமது நாட்டின் வெளிநாட்டு ஒதுக்குத் தொகை, இவ்வாறு துரிதமாக குறைவடைவதால் ஏற்பட்டுள்ள நிச்சயமற்றத்தன்மையின் விளைவாக, 2014.12.31 ஆம் திகதியன்று அமெரிக்க டொலருக்கு ஒப்பீட்டளவில் சுமார் ரூபா 130.50 பெறுமதிக்கு கொடுக்கல் வாங்கல் செய்யப்பட்ட இலங்கை ரூபாய், இன்றளவில் சுமார் ரூபா 132.50 மட்டத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளதால், கடந்த 100 நாட்களினுள் மாத்திரம் இலங்கை ரூபாய் சுமார் 1.5% பெறுமதியினால் வீழ்ச்சியடைந்துள்ளதோடு, வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் (Foreign Exchange Market) இலங்கை ரூபாயின் பெறுமதியிறக்கம் அடைவதை தடுக்க முடியாமையினால், அரசாங்கத்தின் வெளிநாட்டு கடன் தொகையின் உள்நாட்டுப் பெறுமதியும் பெருமளவில் அதிகரித்துள்ளதோடு, இதன் காரணமாக, நாட்டின் முழுமொத்த கடன் தொகையின் பெறுமதி இன்றளவில் மேலதிகமாக சுமார் ரூபா 4,500 கோடியால் அதிகரித்துள்ளதோடு தொடர்ந்தும் இலங்கை ரூபாய் பெறுமதியிறக்கம் அடையுமெனில், அதன் மூலம் ஏற்படக்கூடிய அரச படுகடன் தொகையின் அளவு அதிகரிப்பதன் ஊடாக, இலங்கை மிக மோசமான படுகடன் சவாலை எதிர்கொள்ள நேரிடுமென்பதையும்;

(7) மேலே குறிப்பிட்ட நடவடிக்கைகளின் காரணமாக, பிரதம அமைச்சர், நிதி அமைச்சர், இலங்கை மத்திய வங்கி ஆளுநர் ஆகியோர் தொடர்பாக நாளுக்கு நாள் அதிகரித்துவரும் நம்பிக்கையின்மையால், கொழும்பு பங்குச் சந்தை துரிதகதியில் வீழ்ச்சியடைந்துள்ளதோடு, இதனூடாக, கடந்த 100 நாட்களில் மாத்திரம் இலங்கையிலுள்ள நிறுவனங்களின் சந்தை மூலதனம் (Market Capitalization) ரூபா 2,000 கோடிக்கும் அதிகளவில் தற்போது வீழ்ச்சியடைந்துள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளமை;

மேற்படி விடயங்களின் பிரகாரம், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் திரு. அர்ஜுன மஹேந்திரன், மேலே கூறப்பட்ட பொறுப்புவாய்ந்த மகத்தான பதவிக்கு பொருத்தமானவரல்ல என்பது இவரது நடத்தையின் ஊடாகவே எடுத்துக்காட்டப் பட்டுள்ளதாலும்;

இவர் ஐக்கிய தேசிய கட்சியின் ஒரு சில அரசியல் மற்றும் வேறு தனிப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள முயற்சித்துள்ளாரென்பதாலும்;

இவரது செயற்பாடுகள், கட்டளைகள் மற்றும் நடத்தை காரணமாக இலங்கை அரசாங்கத்திற்கும் தேசிய பொருளாதாரத்திற்கும் பெரும் பாதிப்பும் நட்டமும் அபகீர்த்தியும் நேரிட்டுள்ளதாலும்;

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் திரு. அர்ஜுன மஹேந்திரன், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பதவியிலிருந்து உடனடியாக பதவிநீக்கம் செய்யப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகிறது.